# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1652/09 - 2010 මැයි 03 වැනි සඳුදා - 2010.05.03

*1652/09 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : இரபிசெ/22/எல்/ஏ/7253/2.
காணி அமைச்சின் குறிப்பு இல. : 3ஜே/73/எல்ஜீ/584.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை அரசு எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கிறது என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

சப்பிரமுவ மாகாணத்தின், இரத்தினபுரி மாவட்டத்தில், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவில், மெதபத்துவ சிறு பிரிவில், மூத்தூவ கிராமத்தில் அமைந்த நில அளவை மாஅதிபரால் அளந்து தயாரிக்கப்பட்ட 1998.01.09 ஆந் திகதியிடப்பட்ட எப்வீபீ 80 இன் 41 ஆவது படிவத்தில் மேலதிகமான 41 எனக் குறிப்பிடப்பட்ட வரைபடத்தின் 879 ஆம் இலக்கமாக "தெல்வத்த" எனும் காணியில் முழு அளவில் 0.1205 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணி :

**துண்டு இல. 879**

காணியின் பெயர் : தெல்வத்த ; உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : 1. கே. வீ. லால் கமகே, இல. 10/10, விளையாட்டு மைதான பாதை, மூத்தூவ, இரத்தினபுரி, 2. ஜீ. வீ. புஞ்சி நிலமே, கெட்டன்கம, இரத்தினபுரி, 3. கே. எம். புஞ்சி நிலமே, ரன்தியதென்ன, மூத்தூவ, இரத்தினபுரி, 4. பி. எம். சுகதபால, பஹலவத்த, மூத்தூவ, இரத்தினபுரி ; விஸ்தீரணம் : 0.1205 ஹெக்டயார்.

வடக்கு : கமுகங்கை மற்றும் துண்டு இல. 880 ; கிழக்கு : துண்டு இல. 880 மற்றும் எத்ஓய ; தெற்கு : எத்ஓய மற்றும் ஓடை ; மேற்கு : எத்ஓய ஓடை மற்றும் களுகங்கை.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2010ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஜே. எம். தேவப்பிரிய விஜயராஜ,
பிரதேச செயலாளர்,
இரத்தினபுரி.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
இரத்தினபுரி,
2010.04.30.

05 - 362

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.